OS. 69/2021

நாள். 05.01.2024

**வா.சா. 1 –** அப்துல் சமது

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

குறுக்கு விசாரணை

வழக்கு சொத்துக்களை குறித்து பாகம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4 அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4 சொத்துகளின் விஸ்தீரணம் நான்கு மால் தெரியும். 1ம் லக்க சொத்து இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடி கிராமத்தில் சர்வே எண் 174/2ஓ, விஸ்தீரணம் 1800 சதுர அடி இருக்கலாம். 2ம் லக்க சொத்தின் சர்வே எண் 51/23 விஸ்தீரணம் தெரியவில்லை. 3ம் லக்க சொத்தின சர்வே எண் 615/1 விஸ்தீரணம் அதன் பரப்பு தெரியவில்லை. 4ம் லக்க சொத்தின் சர்வே எண் 151/2, 158/3 அதன் விஸ்தீரணம் தெரியவில்லை. வழக்கு தாக்கல் செய்த பின்பு சொத்து விவரத்தை மாற்றுவதற்கு மனு தாக்கல் செய்து வழக்குரையில் திருத்தம் செய்துள்ளேனா என்றால் இல்லை. 4அயிட்ட சொத்துக்களில் 3 அயிட்ட சொத்துக்களளில் புல எண்கள் 174/2ஓ, 615/1, 151/2, 158/3 என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. என் தாயாருக்கு பாத்தியப்பட்டது 3 லக்க சொத்தாகும். 4 அயிட்ட சொத்துக்களும் கிரையத்தின் மூலம் என் பெற்றோர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில தாக்கல் செய்துள்ளேன். புல எண் 174/2ஓ ல் உள்ள சொத்து வீடாகும். அந்த வீட்டில் சுக்ரியா பேகம் வசித்து வருகிறார் என்றால் வசித்து வருகிறார் நாங்களும் அந்த வீட்டில் சென்று இருப்போம் என சாட்சியம் அளிக்கிறார். என் வீட்டின் முகவரி 3/149ஏ ஆகும். அந்த வீடு சர்வே எண் 174/2ஓவில் இல்லை என்றால் சரிதான். எனக்கு தனியாக வீடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வீட்டிற்கான மின் வரி ரசீதுகள் சுக்ரியா பேகம் பெயரில் உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. அந்த வீட்டை ஒட்டி ஒரு மெடிக்கல் உள்ளது. அந்த மெடிக்கல் சுக்ரியா பேகம் நடத்தி வந்து தற்போது அக்கடை மூடப்பட்டுவிட்டது. அக்கடையும் புல எண் 174/2ஓவில் தான் உள்ளது. சுக்ரியா பேகம் அந்த வீட்டில் 50 வருடத்திற்கும் மேலாக குடியிருந்து வருகிறாரா என்றால் 15 வருடங்களாக குடியிருந்து

வருகிறார். நாங்கள் குடியிருக்க வைத்துள்ளோம் என சாட்சியம் அளிக்கிறார். சுக்ரியா பேகம் ஒரு இனாம் செட்டில்மெண்ட் ஏற்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. யாரால் எழுதி கொடுக்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. சர்வே எண் 174/2ஓவில் சுக்ரியா பேகம் தான் இனாம் செட்டில்மெண்ட் அடிப்படையில் குடியிருந்து வருகிறார் என்றால் அவ்வாறு இல்லை. நாங்கள் தான் குடியிருக்க வைத்துள்ளோம். புல எண் 174/2ஓவில் சுமார் 300 சதுரஅடி எங்களுக்கு உரிமையுடையது என்றும் அச்சொத்து மட்டுமே எங்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 174/2ஓவில் ஐ பொறுத்து 1,4,5,6 முதல் 9 பிரதிவாதிகளின் தாயரான சுல்தானியா பேகம் ஆகியோர்கள் சேர்ந்து 3ம் பிரதிவாதி சுக்ரியா பேகத்திற்கு இனாம் செட்டில்மெண்டை அவரவர்கள் பாகத்தை குறித்து எழுதி கொடுத்துள்ளனர் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சர்வே எண் 151/2 காலி இடம் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கு என் தாயார் 13.06.2008ம் தேதி ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த அடிப்படையில் 4ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதியிடம் ரூ.60,000 க்கு ஒரு அடமானம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பின்னால் அந்த விவரத்தை தெரிந்து கொண்டேன். 2011–12 காலவாக்கில் தான் எனக்கு அந்த அடமான விவரம் தெரிய வந்தது. அந்த அடமானத்தை மீட்க நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் மேற்படி சொத்து அடமானம் சம்மந்தமாக எங்களுக்கு சம்மந்தம் இல்லாததால் அடமானத்தை மீட்க நடவடிக்கை எடுக்கவில்லை. என் தாயார் கடைசி காலத்தில் அவரது வாரிசுகள் அனைவரது வீட்டிலும் தான் இருந்து வந்தார். உடல் நிலை சரியில்லாமல் என் தாயார் இருந்து 2009ல் காலமானார். மாதம், தேதி ஞாபகம் இல்லை. உடல் நிலை சரியில்லாத காலத்தில் ரூ.10லட்சம் செலவாகி இருக்கும் என்றால் அவ்வாறு செலவு செய்யவில்லை. நானும் சேர்ந்து தான் என் தாயாருக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டேன். மருத்துவ சிகிச்சை என் தாயாருக்கு செய்த விவரம் என் வசம் உள்ளதா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. என் தாயார் உடல் நிலை சரியில்லாமல் இருந்த போது ரூ.10லட்சம் வரை செலவு செய்யப்பட்டது என்றும் அதன் காரணமாக 4ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் கொடுத்து 6ம் பிரதிவாதியிடம் 4ம் பிரதிவாதி மூலம் ரூ.60000 அச்சொத்து அடமானம் வைக்கப்பட்டு என் தாயாருக்கு

செலவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 615/1 வீடு உள்ளதா என்றால் இல்லை. கிணறு உள்ளது. அந்த கிணற்றில் மின் மோட்டார் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான், 2ம் வாதி மற்றும் 4ம் பிரதிவாதி மின் மோட்டார் அமைத்து கிணற்றில் தண்ணீர் இறைத்து வருகிறோம். வாதிகள் தான் மின் மோட்டார் வைத்துள்ளோம். 4ம் பிரதிவாதி தனியாக மின் மோட்டார் இணைக்கவில்லை. புல எண் 615/1 வழியாக மின் மோட்டார் செல்வதற்கு 10 அடி பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த பாதை தற்போது பயன்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். அந்த பாதையை மறைத்து வைத்துள்ளோம் என்றும் தற்போது பயன்பாட்டில் உள்ளது என்று வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புல எண் 615/1ல் வீடு உள்ளதாகவும், அதன் மதிப்பு ரூ.10லட்சம் என்றும் தவறுதலாக தெரிவித்துள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண் 151/2, 158/3 ஆகிய சொத்துக்களை உபய வாதிகளும் சேர்ந்து விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 5,6 சொத்துக்கள் சர்வே எண் 174/1 சி ஆகும். மேற்படி புல எண் 174/1சி யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி புல எண் 174/1சி குறித்து 2008ம் ஆண்டிலேயே 6 முதல் 9 பிரதிவாதிகளின் தாயார் சுல்தானியா பேகத்திற்கு என் தாயார் சூரத்பல்கீஸ் இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற விவரம் என் தாயார் இறந்த பின் 2011–12 வாக்கில் தெரிந்து கொண்டேன். அப்போது என் தாயாருக்கு மனநிலை சரியில்லை என சாட்சி தானாக முன் வந்து சாட்சியம் அளிக்கிறார். வா.சா.ஆ.4 ஐ எனது சகோதரர் 01.06.2009ல் நகல் சார் பதிவகத்தில் எடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ4 ஐ நான் இனாம் செட்டில்மெண்டை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். புல எண் 174/1சி 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு இனாம் செட்டில்மெண்ட் என் தாயார் எழுதி கொடுத்துள்ளதால் அச்சொத்தை பொறுத்து எங்களுக்கு பாகம் வழங்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை தவிர்த்து என் பெற்றோர்களுக்கு இதர சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். அச்சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு போட்ட பின்பு சர்வே எண்களை தெரிந்து கொண்டேன். அந்த சர்வே எண்களையும் இந்த வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

அந்த சொத்துக்கள் என் பராமரிப்பில் உள்ளதால் தான் பாக வழக்கில் அந்த சொத்துகளை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அச்சொத்துகளை குறித்து பிரதிவாதிகள் தனியாக வழக்கு தாக்கல் செய்ய தயாராக உள்ளனர் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்கு சொத்துக்களின் மதிப்பு குறித்து நாங்கள் கூறியுள்ள விவரம் தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பொது அனுபவத்தில் இருப்பதாக கண்டு நீதிமனற கட்டணம் செலுத்தியிருப்பது தவறானது என்றால் சரியல்ல. மேலும் இவ்வழக்கு கால வரம்பு தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வழங்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.